**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**GWOP No. 31/2024**

**நாள்.07.11.2025**

ம.சா.1 திருமதி.சீதா மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதன்மை விசாரணை தொடர்ச்சி (அனுமதியுடன்)**

எனது முதன்மை விசாரணை தொடர்ச்சியை சாட்சியத்தை கூடுதல் நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

ஆவணங்கள்

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 08.02.2024 | ம.சா.ஆ.7 | HMOP No.56/2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு | வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 2) | 29.11.2024 | ம.சா.ஆ.8 | துணை காவல் கண்காணிப்பாளர், முதுகுளத்தூர் அவர்களுக்கு நான் அனுப்பிய RTI மனு | நகல் |
| 3) | -- | ம.சா.ஆ.9 | மேற்படி மனுவிற்கு கொடுத்த பதில் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் (7 தாள்கள் கொண்டது) | அசல் மற்றும் உண்மை நகல் |

மேற்படி ம.சா.ஆ.7 வளைத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட எலக்ட்ரானிக்ஸ் எவிடன்ஸ் என்பதால் இந்திய சாட்சிய சட்ட பிரிவு 65 B (4) ன்படி சான்றிதழ் இணைக்கப்படவில்லை. எனவே மேற்படி சான்றிதழ் தாக்கல் செய்வதை பொறுத்து மேற்படி ஆவணத்தின் ஏற்றுக்கொள்ளும்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.07 16:05:15 +0530

தன்மை குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் குழந்தை தபூர்வா–வை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன சங்கதிகளை வைத்துதான் வழக்கின் மனு மற்றும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது குழந்தைக்கு தற்போது என்ன வயதாகிறது என்றால் டிசம்பர் வந்தால் 7 வயது முடிவடைகிறது. என் குழந்தை தற்போது என்ன படிக்கிறார் என்றால் முதுகுளத்தூரில் 2ம் வகுப்பு படிக்கிறார். ஆனால் எனது மனுவில் ஏனாதி கிராமத்தில் படித்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் முதலில் அங்கு பால்வாடியில் படித்தார், தற்போது முதுகுளத்தூரில் பள்ளிவாசல் தொடக்க பள்ளியில் 2ம்வகுப்பு படிக்கிறார். என் குழந்தையை எதிர்மனுதாரருடன் நான் ஒப்படைத்தபோது அவருக்கு என்ன வயது என்ன இருக்கும் என்றால், நான் ஒப்படைக்கவில்லை, காவல் நிலையத்தில் இருக்கும்போது எதிர்மனுதாரர் குழந்தையை பிடுங்கி கொண்டு போய்விட்டார். அப்போது குழந்தைக்கு 1 வயது இருக்கும். அவ்வாறு பிடுங்கி சென்றது குறித்து எதிர்மனுதாரர் மீது போலிஸில் புகாரோ அல்லது வழக்கறிஞர் மூலம் அறிவிப்போ கொடுத்தேனா என்றால் இல்லை. ஊரில் பெரியவர்களை வைத்து பேசினேன். உண்மையிலேயே அவ்வாறு பிடுங்கி சென்றிருந்தால் நான் அன்றைய தினமே போலிஸில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் மீண்டும் சேர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணத்தில் புகார் கொடுக்கவில்லை. அவ்வாறு சேர்ந்து வாழ வேண்டும் என்று 2019ம் ஆண்டு முதல் நீதிமன்றம் மூலம் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா நீதிமன்றம் மூலம் எடுக்கவில்லை.

எந்த தேதியில், எந்த ஊர்க்காரர்கள் முனனிலையில், ஊரில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.07 16:05:19 +0530

பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. நம்பியார் என்பவர் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது. அவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் எப்போது இறந்தார் என்றால் சுமார் 6 மாதங்களுக்கு முன்பு இறந்தார். முதுகுளத்தூரில் என் கணவர் தாக்கல் செய்த HMOP No.56/2023 வழக்கில் நான் தாக்கல் செய்த எதிருரையில் மேற்படி நம்பியார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசியதாக சொல்லியுள்ளேனா என்றால் பெயர் சொல்லவில்லை.

19.12.2019 ம் தேதியிலிருந்து நான் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது பணம் மற்றும் நகைகளை எடுத்துச்சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. கழுத்தில் போட்டிருந்த 5 பவுன் செயின் உடன்தான் சென்றேன். என்ன காரணத்திற்காக நான் கைக்குழந்தையுடன் வீட்டை விட்டு வெளியே சென்றேன் என்றால் எதிர்மனுதாரர் என்னை அடித்துக்கொண்டு இருந்ததால், நான் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் வீட்டை விட்டு போனேன். அவ்வாறு தற்கொலை செய்து கொள்வதற்காக போன நான் எதற்காக கைக்குழந்தையை கூட்டிக்கொண்டு சென்றேன் என்றால் குழந்தையை தனியாக விட்டுச்செல்ல முடியாது என்பதால் தூக்கி சென்றேன். தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் வீட்டை விட்டு சென்ற நான், குழந்தையையும் தூக்கி சென்றதால், குழந்தையை கொல்லும் எண்ணத்தில்தான் கூட்டி சென்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனநிலை ஒரு நிலையில் இல்லை என்றும், அதனால் குழந்தையை என்னிடம் ஒப்படைத்தால் நான் அதை முறையாக பராமரிக்க மாட்டேன் என்றும், எந்த நேரத்திலும், எதுவும் செய்ய வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. 19.12.2019 ம் தேதி வீட்டை விட்டு சென்ற என்னை, 24.12.2019 ம் தேதி மணப்பாறை காவேரி லாட்ஜ்ஜில் இருந்து ப்ரத்விராஜ் என்ற நபரிடம் இருந்து போலிசார் என்னை அழைத்து வந்ததார்கள் என்றால் சரியல்ல. நான் மணப்பாறை பேருந்து நிறுத்தில்தான் குழந்தையை வைத்துக்கொண்டு நின்றிருந்தேன். லாட்ஜில் இல்லை. மேற்சொன்ன 5



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.07 16:05:22 +0530

நாட்கள் நான், யாருடன் எங்கே தங்கியிருந்தேன் என்ற விவரத்தை என் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் 19.12.2019 ம்தேதி வீட்டை விட்டு சென்றபின்னர் ப்ரத்விராஜ் என்பவரை 2 ம் திருமணம் செய்து கொண்டேன் என்றும், அவருடன்தான் மேற்படி 5 நாட்கள் சேர்ந்து இருந்தேன் என்று சொல்வது சரியல்ல. நான் தற்போதுவரை மேற்படி ப்ரத்விராஜ் உடன்தான் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நான் சேர்ந்து வாழ்வதற்கு பணம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றும், அதனால்தான் நான் தாக்கல் செய்துள்ள எனது மனுவில் நகைகள் மற்றும் பணத்தை பற்றி மட்டும்தான் கூறியுள்ளேன் என்றும், குழந்தையை பற்றி ஏதோ காரணம் கூற வேண்டும் என்பதற்காக ஒரு பத்தியில் மட்டும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2019 முதல் இன்றுவரை நான் எனது கணவரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரிதான். HMOP வழக்கிலும், இந்த வழக்கு எதிர்உரையிலும், நானும், பிரத்விராஜும் சட்டத்திற்கு மீறிய உறவில் வாழ்ந்து வருவதாக எதிர்மனுதாரர் கூறியுள்ளார் என்றால் அவ்வாறு வாழவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மனுவில், என் கணவர், ஏனாதி கிராமத்தை சேர்ந்த கணவரை இழந்த ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளதாக சொல்லியுள்ளேன், பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் நான் கூறுவது போல் வேறு எந்த பெண்ணுடனும் தொடாபில் இல்லை என்றும், அதனால்தான் நான் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவரிடம் இருந்து நான் பணத்தை பறிக்கும் நோக்கத்தில்தான் நான் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றும், குழந்தையை பெறும் எண்ணம் எணக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் வேலை எதுவும் பார்க்கவில்லை.

குழந்தையை என்னிடம் ஒப்படைத்தால், குழந்தையை பராமரிப்பதற்கு எனக்கு போதிய வருமானம் இல்லை என்றால் சரியல்ல, நாங்கள்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.07 16:05:25 +0530

கூட்டு குடும்பமாகதான் வாழ்கிறோம். அதனால் எனது அண்ணன், அம்மா ஆகியோர் பார்த்து கொள்வார்கள். நானே எனது பெற்றோரை நம்பி இருந்து வருவதால், குழந்தையை என்னிடம் ஒப்படைக்க முடியாது என்றால் சரியல்ல. உண்மையிலேயே குழந்தையை பராமரிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால், குழந்தையை பார்க்க இடைக்கால மனு தாக்கல் செய்து அனுமதி பெற்றிருப்பேன் என்றால் மனு கொடுத்துள்ளேன்.

எதிர்மனுதாரர் தனது மன உளைச்சல் காரணமாக விவாகரத்து மனுவினை வாபஸ் பெற்றார் என்றால் சரியல்ல. அவருக்கு மன உளைச்சல் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. குழந்தையை பராமரித்து வளர்க்கக்கூடிய அளவிற்கு எனக்கு மனநிலையோ, பண வசதியோ கிடையாது என்றால் சரியல்ல. நான் கோரிய பாரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.07 16:05:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .